மின்னிதழ்

# தேசியம்

THESIYAM තේසියම්

www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 90 | 22.06.2023 (வியாழக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## தமிழர்களுக்கு எதிரான அடுத்த வன்முறை

# குருந்தூர் மலையிலா? திரியாயிலா?

## அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி

பக்கம் 4

## மக்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட பெரிய காகமே அரசாங்கத்தை பாதுகாக்கிறது : எம்.ஏ.சுமந்திரன்



கபுடு கா,கா, என்று மக்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட பெரிய காகம் தான் இந்த அரசாங்கத்தை பாதுகாக்கிறது. மக்கள் போராட்டத்தால் சிறிது காலம் விலகி இருந்தவர்களுக்கு எதிர் வரும் நாட்களில் அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது.

அடிப்படை கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தாமல் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியிலும் ஆட்சியாளர்கள் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்

பக்கம் 4

## நீதிமன்ற கட்டளையை மீறித் தொடரும் குருந்தூர்மலை கட்டுமானப் பணிகள்: ரவிகரன் கடும் கண்டனம்!!



முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் நீதிமன்றக்கட்டளையை மீறித் தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், அதற்கு முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலைக்கு நேற்று (21.06.2023) சென்று அங்கு நேரடியிகப்பார்வையிட்டு, அங்கு தொடர்ந்தும் நீதிமன்றக்

பக்கம் 4

## உள்ளக விசாரணையில் ஒருபோதும் நீதி கிடைக்காது: கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை மந்தகரமாகவே செயற்படுகிறது. சுதந்திரமான விசாரணை முன்னெடுக்கப்படுவது சந்தேகத்துக்குரியது என்பதை உலக நாடுகள் இன்று ஏற்றுக் கொண்டுள்ளன.

உள்ளக விசாரணையில் ஒருபோதும் நீதி கிடைக்காது என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பக்கம் 4

## சிங்களவர்கள் இந்தியாவிலிருந்தே வந்தார்கள் : மனோ கணேசன் எம்.பி பகிரங்கம்



நாம் இலங்கையர்கள், நாம் இந்திய பிரஜைகள் அல்ல என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் இன்றைய தினம் இடம்பெற்ற மலையக மக்களின் காணியுரிமை நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், அப்படிப்பார்க்கும் போது சிங்களவர்களும் இந்தியாவிலிருந்து தான் வந்தார்கள். ஆனால் அது பிரச்சினை இல்லை.

பக்கம் 4



# மன்னாரில் சமுர்த்தி பயனாளிகள் பிரதேச செயலகங்களுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம்






நலன்புரி நன்மைகள் சபையினால் நேற்றைய தினம் வெளியிடப்பட்டிருக்கும் புதிய சமுர்த்தி பயனாளிகளை அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் உள்வாங்கப்படாத பயனாளிகள் நேற்றைய தினம் புதன்கிழமை மன்னார் பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் பட்டியலில் பணம் வசதி உடைய மற்றும் மாடி வீடுகளில் வசிப்பவர்களும் உள்வாங்கப்பட்டிருப்பதாகவும் ஆனால் தேவையுடைய மாற்றுத்திறனாளிகள், விதவைகள், சிறு நீரக நோயாளிகள் உட்பட பலரின் பெயர் உள்ளடக்கப்படவில்லை எனவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த பட்டியல் பொருத்தமற்றது என தெரிவித்தும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்களுடன் மன்னார் நகர் பிரதேச செயலாளர் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் புதிய நடைமுறை தொடர்பிலும் தெளிவுபடுத்தியிருந்தார்.

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர், போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களின் கோரிக்கை தொடர்பில் தாங்கள் பரீசிலிப்பதாகவும் பட்டியலில் விடுபட்டு சமுர்த்தி பெறுவதற்கான தகுதியுடைய நபர்கள் மேன் முறையீட்டை மேற்கொள்ளுமாறும்,சமுர்த்தி பட்டியலில் பெயர் குறிப்பிட்டுள்ள நபர்கள் இருப்பின் அவர்கள் தொடர்பிலும் முறைப்பாடு வழங்கும் படி மன்னார் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

# ஊடகத்துறைக்கு எதிரான ஒடுக்குமுறையை வன்மையாக கண்டிக்கிறோம்: இரா.துரைரட்னம்




இலங்கை அரசாங்கம் ஊடகத்துறையை ஒடுக்குவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் என முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரட்னம் தெரிவித்துள்ளார்.

மட்டு ஊடக அமையத்தில் நேற்றையதினம் (21.06.2023) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

சில தினங்களாக நாடாளுமன்றத்தில் ஊடகத்துறை தொடர்பான விடயங்கள் பேசப்பட்டு வருகின்றன. இலங்கை அரசு நாடாளுமன்றத்தின் ஊடாக ஊடகத்துறைக்கு வைக்கப்படும் ஜனநாயக சதியை மக்கள் பிரதிநிதிகள் நிராகரிக்க வேண்டும்.

குறிப்பாக ஊடகத்துறை தொடர்பான விடயங்களுக்கு எழுத்து சுதந்திரம், பேச்சு சுதந்திரம் மற்றும் ஏனைய ஜனநாயக சுதந்திரம் அவசியம்.

எனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசு சார்பாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஊடக ஒடுக்குமுறையை கண்டிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கடந்த ஒரு சில வாரங்களாக பொதுஜன பெரமுன விற்கும், ஜனாதிபதிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இந்த முரண்பாடுகளினால் "தமிழ் மக்களுக்கான தீர்வு பின் தள்ளப்படும்" என சந்தேகம் உருவாகியுள்ளது என தெரிவித்துள்ளார்.

# உதய கம்மன்பிலவின் குருந்தூர்மலை விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்!!





பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் முல்லைத்தீவு குருந்தூர்மலை விஜயத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலைக்கு நேற்று புதன்கிழமை (21) உதய கம்மன்பில விஜயமொன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வருகை தருவதற்கு முன்னதாக குருந்தூர்மலை அடிவாரத்தில் ஒன்று கூடிய தண்ணிமுறிப்புக்குரிய மக்களும், மக்கள் பிரதிநிதிகள் சிலரும் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்திருந்தனர்.

அதன்படி, தண்ணிமுறிப்புப் பகுதியில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறும், தண்ணிமுறிப்புப் பகுதியில் மீள் குடியேற்றம் செய்யுமாறும் வலியுறுத்தியே இவ்வாறு ஆர்ப்பாட்டம் மேற் கொள்ளப்பட்டது.

அத்தோடு, திட்டமிடப்பட்ட சிங்களமயமாக்கல் மற்றும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்கு ஆர்ப்பாட்டக்காரர்களால் இதன்போது கடுமையான எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் இ.சத்தியசீலன், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செயற்பாட்டாளர் அ.பீற்றர் இளஞ்செழியன், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும், இவ்வாறு உதயன் கம்மன்பில குருந்தூர்மலைக்கு விஜம் மேற்கொள்ளவுள்ள நிலையில், குருந்தூர்மலை அடிவாரம் மற்றும் குருந்தூர் மலையை அண்டிய பகுதிகளில் அதிகளவில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆலயங்களில் வாண வேடிக்கை நிகழ்வுகள்

## நிறுத்தப்பட வேண்டும்..! ஆறு.திருமுருகன் வேண்டுகோள்..!




ஆலயங்களில் வாண வேடிக்கை நிகழ்வுகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் பக்திக்கான முழுமையான இடமாக ஆலயம் மிளிர வேண்டும் என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (20) தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற உள சமூக அமைய கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலையகத்தில் சிவபூமி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் முன்னுதாரணத்தை யாழ் மாணவர்களும் பின்பற்ற வேண்டும். அதேவேளை மரண நிகழ்வின் போது காசை கரியாக்கி சூழலை மாசுபடுத்தி பாடசாலை மற்றும் வைத்தியசாலை என்றும் பாராது அனைத்து இடங்களிலும் வெடி கொளுத்தும் ஈனச்செயல் எம் மண்ணிலிருந்து ஒழிக்கப்பட வேண்டுகோள் விடுத்தார்.

ஆலயங்களில் வாண வேடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். பக்திக்கான முழுமையான இடமாக ஆலயம் மிளிர வேண்டும் வாரந்தம் வரும் பக்தர்கள் அதிகரிக்க வேண்டும் ஆலயம் அறப்பணி மையமாக கொண்டு மிளர வேண்டும்.

சிக்கனத்திற்கும் புண்ணியத்திற்கும் பண்பாட்டிற்கும் பெயர்போன தமிழ்ச்சமூகம் தன் பண்டைப் பெருமையை மீட்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் குடும்பத்தோடு வெள்ளிக்கிழமைகளில் ஆலயங்களிலும் ஞாயிறு காலை அறநெறிக்கும் ஞாயிறு மாலை உறவுகள் வீட்டுக்கு சென்று கூடி குதூகலிக்க மூத்தோரின் இனிய வழிகாட்டல்களைப் பெற குழந்தைகளிற்கு வழி ஏற்படுத்தப்பட வேண்டும் அதற்கு பெற்றோர் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்றார்.




கொழும்பில் தனது பிள்ளைக்கு கல்விவேண்டும் என ஒரு தாய் தனது பிள்ளையை தோளில் சுமந்தவாறு போராட்டத்தில் ஈடுபட்ட காணொளி சமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

# லைக்கா குழுமத்தின் தலைவருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பு!!

## அரசியல் கைதிகளின் விடுதலை குறித்தும் வலியுறுத்து!



லைக்கா குழுமத்தின் நிறுவனரும் தலைவருமான அல்லிராஜா சுபாஸ்கரன் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரித்தானியாவில் சந்தித்து கலந்துரையாடி உள்ளார்.

யுத்தத்தினால் நலிவடைந்த வடக்கு கிழக்கு பிரதேசங்களின் அபிவிருத்தி, ஆதரவற்றோரின் வாழ்வை வளப்படுத்தல், அரசியல் தீர்வு என்பன சமாந்தரமாக நகர்த்தப்படல் வேண்டும் என்ற இலக்கை கொண்டுள்ள லைக்கா குழுமத்தின் தலைவர் அல்லிராஜா சுபாஸ்கரன் அது குறித்த தனது நிலைப்பாட்டை ஜனாதிபதியுடனான உரையாடலில் வலியுறுத்தி உள்ளார்.

அதனடிப்படையில் ஆளும் அரசாங்கமும், ஜனாதிபதியும் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கான ஆரம்பமாக அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிப்பது குறித்த கோரிக்கையை முன்வைத்தார்.

இதனை நிறைவேற்றுவதாக தெரிவித்த ஜனாதிபதி, அதற்கான சட்ட நடைமுறைகளை துரிதப்படுத்துவதற்கும் இணங்கியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின், இலங்கையிலும், வெளிநாடுகளிலும் மேற்கொண்ட சந்திப்புக்களில் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து, லைக்கா குழுமத்தின் நிறுவனரும் தலைவருமான அல்லிராஜா சுபாஸ்கரன் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்.

அத்துடன் நின்றுவிடாது, இலங்கை அரசாங்கத்தினால் முதற்கட்டமாக விடுவிக்கப்பட்ட 5 பேருக்கும், இரண்டாம் கட்டமாக விடுவிக்கப்பட்ட 10 பேருக்கும், தற்போது 3 ஆம் கட்டமாக விடுவிக்கப்பட்ட 13 பேருமாக 28 அரசியல் கைதிகளுக்கும் தலா 25 லட்சம் (7கோடி ரூபாய்) லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஊடாக வழங்கி வைத்துள்ளார்.

தமது வாழ்வை சிறைகளில் தொலைத்த அரசியல் கைதிகளுக்கு தனி ஒருவரால் இது வரை வழங்கப்பட்ட அதி கூடிய உதவியாக இந்த உதவி அமைந்துள்ளது என சில ஆய்வாளர்கள் தமது கட்டுரைகளில் கூட்டிக் காட்டியிருந்தார்கள்.

யுத்தம் காவு கொண்ட பிரதேசங்களையும், மக்களின் வாழ்வையும் கட்டி எழுப்புவதற்கு அரசியல் தீர்வை நோக்கி பயணிப்பது அவசியம். அந்த அரசியல் தீர்வைப் பெறுவதற்கும், அதனோடு சமாந்தரமாக அப்பிரதேசங்களின் அபிவிருத்தியையும், நாளாந்தம் மக்கள் எதிர் கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு, ஆளும் அரசாங்கங்களோடும், அவ்வரசாங்கங்களின் தலைவர்களோடுமே பேசவேண்டியது அவசியம் என்ற அடிப்படையில் தனது இந்த சந்திப்புகள் தொடர்வதாக, லைக்கா குழுமத்தின் நிறுவனரும் தலைவரும், லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நிறுவனருமான அல்லிராஜா சுபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான இந்த சந்திப்பில் லைக்கா குழுமத்தின் பிரதித் தலைவர் பிரேம் சிவசாமி, லைக்கா குழுமத்தின் தலைவர் அல்லிராஜா சுபாஸ்கரனின் பாரியாரும் லைக்கா ஹெல்த்தின் தலைவருமான பிரேமா சுபாஸ்கரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் கொண்டுவரப்படுகின்ற புதிய சட்டங்களால் எந்த பயனும் இல்லை!!

## கடுதாசிதான் விரயம்..! சுமந்திரன்



இலங்கையில் கொண்டுவரப்படுகின்ற புதிய சட்டங்களால் எந்த பயனும் இல்லை என்றும் பொருளாதார நெருக்கடியான காலப்பகுதியில் கடுதாசி விரயமே ஏற்படும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இலங்கையில் சட்டங்கள் தொடர்பாக பாரிய சிக்கல் நிலையே காணப்படுகின்றது.

ஆனால் சட்டமூலங்களினால் இந்த பிரச்சனைகள் ஏற்படவில்லை.

மாறாக சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தான், இந்த பாரிய சிக்கல் நிலை காணப்படுகின்றது.

இது இலங்கை தொடர்ந்தும் காணக்கூடியதொரு பிரச்சனையாகும்.

தற்போதைய அரசாங்கம் புதிய சட்டங்களை கொண்டுவருகின்றது.

ஆனால் இந்த சட்ட மூலங்கள், சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச அழுத்தங்களினால் கொண்டு வரப்படுகின்றது.

இது வெறுமனே கடுதாசி விரயத்தை ஏற்படுத்தும் நடைமுறை என நான் நினைக்கின்றேன்.

பொருளாதார நெருக்கடியான நேரத்தில் கூட வெறுமனே கடுதாசிகளை விரயமாக்கும் செயல்.

ஏன்னெனில் சட்டமூலங்கள் அமுல்படுத்தப்பட்டால் தான், அதன் நன்மைகளை மக்கள் பெறமுடியும்

இதேவேளை சர்வதேச நாணயநிதியத்தை திருப்திப்படுத்துவதற்காக கொண்டு வரப்படுகின்ற சட்டங்கள் இந்த நாட்டில் இடம்பெறுகின்ற ஊழல் மோசடிகளை தடுத்து நிறுத்தாது.

அத்துடன் இலங்கை அரசாங்கம் பொறுப்புகூறல் என்ற விடயத்தில் அசமந்த போக்குடன் காணப்படுவதாக ஜக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

# யாழ். பேருந்து தரிப்பிடத்தில் அமைக்கப்பட்டது

## குழந்தைகளுக்கான தாய்ப்பால் ஊட்டும் அறை!



யாழ். பேருந்து தரிப்பிடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட குழந்தைகளுக்கான தாய்ப்பால் ஊட்டும் அறையினை திறந்து வைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பேருந்து நிலையத்தை அண்டியுள்ள விற்பனை நிலையங்கள், கழிவு வாய்க்கால்கள் மற்றும் மலசல கூடம் என்பவற்றையும் பார்வையிட்டதுடன், அவற்றை சுகாதார முறைப்படி பேண வேண்டிய அவசியத்தையும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்

இதனிடையே யாழ் பேருந்து நிலையம் மற்றும் சூழவுள்ள வர்த்தக நிலையங்களுக்கான கண்காணிப்பு விஜயத்தினை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரி ஆகியோரை தன்னுடைய அலுவலகத்திற்கு அழைத்து, தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக பிரஸ்தாபித்தார்.

# நெடுந்தீவில் 22 இந்திய மீனவர்கள் கைது..!



இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 22 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு அருகே நேற்று (21) இரவு இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் 3 படகையும் அதிலிருந்த 22 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை காங்கேசன்துறைக்கு அழைத்து வந்து விசாரணைகளுக்கு பின்னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# குருந்தூர் விகாரையை இராணுவமே அமைத்தது உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டது



முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி அமைக்கப்பட்ட விகாரையில் தொடர்ந்தும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

இதேவேளை, இராணுவத்தினரின் பங்களிப்புடனே குறித்து விகாரை பணி, இடம்பெற்றது என்பதை அங்கு புதிதாக அமைக்கப்பட்ட கல்வெட்டு மூலம் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த குருந்தூர் மலை பிரதேசத்தில் தொடர்ந்து இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதோடு, இங்கு வருகை தருபவர்களை, வாகனங்களை பதிவு செய்து வருகின்றனர்.

இதன் மூலம் மீண்டும் குருந்தூர் மலையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட பௌத்தமயமாக்கல் முயற்சி அம்பலமாகியுள்ளது.

குறிப்பாக 79 ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களம் எடுத்து அங்கு நீதிமன்ற கட்டளைகளை மீறி இராணுவத்தை கொண்டு விகாரை அமைத்துள்ளதோடு, மேலும் மக்களின் 279 ஏக்கர் காணிகளை சுவிகரிக்க தொல்பொருள் திணைக்களம் முயற்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களுக்கு எதிரான அடுத்த...

தமிழர்கள் மட்டும் வசிக்கும் பிரதேசங்களில் விகாரைகளையும், தூபிகளையும் கட்டுவதையுமே தமிழர்கள் எதிர்க்கின்றனர் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தெற்கில் தமிழர்களுக்கு எதிரான இனவாத கருத்துக்களை கக்குவதற்கும் அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் அமைச்சும், அமைச்சர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்களோ என்று சிந்திக்க தோன்றுகின்றது.

மீண்டும் மீண்டும் தமிழர்களுக்கு எதிராக, தமிழர்களின் அரசியலுக்கு எதிராக, மரபுரிமை சார்ந்த தமிழர்களின் கொள்கைக்கு எதிராக கருத்துக்கள் வெளிப்படும் நிலையில் தற்போது அரசு சார்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் "பௌத்தர்களின் எழுச்சியை அடக்க முடியாது. பிரபாகரன் போன்று செயல்பட வேண்டாம்.

தெற்கில் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள். வடக்கு தமிழர்களால் பௌத்தர்களுக்கு ஆபத்து வந்துவிட்டது" எனக் கூறி தெற்கின் சிங்கள பௌத்தர்களை உசுப்பேத்தி விடும் செயற்பாட்டில் இறங்கியுள்ளார்.

இது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும். தமிழர்களுக்கு எதிரான அடுத்த வன்முறையை குருந்தூர் மலையிலா? திரியாயிலா? அல்லது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூற்றுகளில் இருந்தா? ஆரம்பிப்பது என யோசிப்பது போல் தோன்றுகின்றது.

இத்தகைய வன்முறையை தூண்டும் கருத்துக்களை அரசு தரப்பினரோ, எதிரணியில் தமிழர்கள் அல்லாத எவரும் கண்டிக்கவும் இல்லை. சமய அமைப்புகளும் இவ்வாறான கருத்துக்களுக்கு மௌனம் காப்பது இவர்களும் இதனை ஆதரிக்கின்றார்களோ? என்று கேட்கவும் வைக்கின்றது.

யுத்த காலத்தில் ஆயுதப்படைகள் தமிழர்களின் பூமியை ஆக்கிரமித்தது போன்று ஆயுதம் மௌனிக்கப்பட்ட நிலையில் சிங்கள பௌத்த கருத்தியல் கொண்ட வனஜீவராசிகள் திணைக்களம், வனவள பாதுகாப்பு திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பன ஆக்கிரமிப்பு வேலைகளை தீவிரப்படுத்தியிருப்பதோடு தமிழர் தாயகத்தில் காணப்படும் தொல்லியல் பெறுமதி வாய்ந்த இடங்களை எல்லாம் சிங்கள பௌத்தருக்கு சொந்தமான எனக்கூறி தமிழர் மரபுரிமையை மறுத்து சிங்கள பௌத்தத்தை நிலைநாட்ட முனைவது தமிழர்களையும் கொதிநிலைக்கு தொடர்ந்து தள்ளுகின்ற செயற்பாடாகும்.

அத்தோடு குருந்தூர் மலை "சைவர்களுக்கும், தமிழ் பௌத்தர்களுக்கும் சொந்தமானது" என்பதை ஏற்றுக் கொள்ள மறுத்து குருந்தூர் விகாரை எனக் கூறி சிங்கள பௌத்தர்களை அணி திரட்ட திட்டமிடுவதோடு, நீதிமன்ற கட்டளையை மீறி இராணுவத்தினரின் துணையோடு விகாரை கட்டுவதையும், தமிழர்கள் அங்கீகரிக்கும் சர்வதேச தொல்லியல் ஆராய்ச்சி நிபுணர்களை சேர்ந்து ஆராய்ச்சி பணியை மேற்கொள்ள எந்த முயற்சியையும் மேற்கொள்ளாதது மட்டுமல்ல, யாழ்ப்பாண பல்கலைக்கழக துறைசார் பேராசிரியர்கள், மாணவர்களை சேர்ந்து தொல்லியல் ஆய்வுகளை நடத்த அனுமதிக்காது தமிழர் மரபுரிமையை இருட்டடிப்பு செய்ய நினைப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழர்கள் "உண்மையான பௌத்தத்திற்கும், சிங்களவர்களுக்கும், வேறு எந்த மதத்தவர்களுக்கும் எதிரானவர்கள் அல்ல" என திரும்பத் திரும்ப கூறினாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்கு ஆகவே உள்ளது. தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வதையும், பௌத்தர்கள் இல்லாத இடங்களில் பௌத்த சின்னங்கள் வைப்பதையும், தமிழர்கள் மட்டும் வசிக்கும் பிரதேசங்களில் விகாரைகளையும், தூபிகளையும் கட்டுவதையுமே தமிழர்கள் எதிர்க்கின்றனர்.

மேலும் புராதன கால சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களில் தமிழ் மன்னர்களின் ஆட்சி காலத்தில் கட்டிய சைவ கோயில்கள் உள்ளன. அங்கு அகழ்வாராய்ச்சி செய்து காணப்படும் தமிழர் மரபுரிமைகளையும், ஏனைய தொல்பொருட்களையும் அழிய விடாது பாதுகாக்காதது ஏன்? அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற இடங்களில் எத்தனையோ மரபுரிமை சார்ந்த இடங்கள் அழிவுகளும் நிலையில் உள்ளன.

அங்கு தொல்பொருள் திணைக்களம் தனது செயற்பாடுகளை மந்த கதியில் நடத்திக் கொண்டு தமிழர் நிலங்களையும், மரபுரிமைகளையும், குருந்தூர் மலையிலா நீதிமன்ற கட்டளைகளை மீறி புதிய நிர்மாண பணியினை மேற்கொள்வதும் ஏன்? எனும் கேள்விக்கு நேரடியாக பதில் கொடுக்க மறுக்கும் சக்திகள் இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டி தம்மை மறைத்துக் கொள்ள பார்க்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்து, வெளிநாட்டு கையிருப்புகளும் தீர்ந்துள்ள நிலையில், கடந்த காலத்தில் வாங்கிய கடன்களோடு, தொடர்ந்து கடன் பெறும் சூழ்நிலையில் வருமானமின்மை, பொருட்களின் விலையேற்றம் காரணமாக மக்கள் தெற்கின் கட்சிகளின் மீது நம்பிக்கை இழந்து விட்டனர். தேர்தல் நடத்தினால் எந்தவொருக்கும் தனித்து ஆட்சி நடத்துவதற்கு பெரும்பான்மை கிடைக்கப் போவதில்லை. எனவே தேர்தலுக்கு முகம் கொடுக்க மீண்டும் இனவாத சக்திகள் தமிழர்களை பலி எடுக்கத் தெற்கின் மக்களை தூண்டுகின்றனரா?

இவர்களோடு சேர்ந்து தமிழர் தாயகத்தின் ஒரு சில சுயநல விரும்பிகளும் தமிழர்களின் தேசியத்தை காட்டிக் கொடுக்கவும் அதற்கு எதிராகவும் செயல்படவும் துணிந்து விட்டது போல் தோன்றுகின்றது. 2009 இனப்படுகொலைக்கும் இத்தகையவர்களே காரணமாக இருந்தார்கள்.

இவரின் கை தற்போது ஓங்கி உள்ளது போல் தெரிகின்றது. இதனை தோற்கடிக்க வேண்டுமானால் தமிழர்களின் தேசியத்தை காக்கும் சக்திகள் வலிமை பெறல் வேண்டும்.

தமிழர்களின் அரசியல் உரிமைகளையும் மரபுரிமைகளையும் பாதுகாக்க சமூக சக்தியாக ஒன்று திரள்வதோடு பிராந்திய அரசியலுக்கு உட்படாது தனித்துவத்தோடு செயல்படுவதற்கான செயல்பாடுகளை தீவிர படுத்தினால் மட்டுமே நாம் சுதந்திரமாக வாழ முடியும் என்றார்.

## மக்களால் கடுமையாக...

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பல முன்னேற்றகரமான சட்டங்களை இயற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கது. இயற்றப்படும் சட்டங்கள் வெறும் காகிதங்களாக இருப்பது பிரச்சினைக்குரியது.

சர்வதேச நாணய நிதியம்,சர்வதேசம் ஆகியவற்றின் அழுத்தங்களுக்கு அமையவே தற்போது சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சட்டங்களை இயற்றி விட்டோம் என சர்வதேசத்திடம் குறிப்பிட்டு விட்டு அரசாங்கம் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்கிறது. இயற்றப்படும் சட்டங்கள் ஏதும் முறையாக அமுல்படுத்தப்படுவதில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளது. பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை அசமந்தகரமாக செயற்படுவதாக இலங்கைக்கான மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அதிருப்தி வெளியிட்டுள்ளார் .இதுவே உண்மை பாதிக்கப்பட்ட தரப்பினர் தொடர்பில் இலங்கை சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகள் ஏதும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

ஊழல் மோசடி நாடு வங்குரோத்து நிலை அடைவதற்கு பிரதான காரணியாக இருந்தது. மோசடி செய்யப்பட்ட அரச நிதி மீண்டும் அரசுடமையாக்கப்பட வேண்டும் என மக்கள் வலியுறுத்தினார்கள். இந்த கோரிக்கை ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஊடாக நிறைவேற்றப்படுமா என்பது சந்தேகத்துக்குரியது.

கடந்த ஆண்டு நாட்டு மக்கள் கபுடு கா,கா என்று கடுமையான விமர்சனத்தை வெளிப்படுத்தினார்கள். மக்களால் வெறுக்கப்பட்ட பெரிய காகம் தான் இந்த அரசாங்கத்தை பாதுகாக்கிறது. போராட்டம் ஊடாக ஜனாதிபதி மாத்திரம் தான் பதவி விலகினார்.

ஆனால் அவருடன் இணக்கமாக செயற்பட்டவர்கள் அரசாங்கத்தில் உள்ளார்கள். மக்களால் வெறுக்கப்பட்டவர்கள் குறுகிய காலம் அமைச்சு பதவிகளில் இருந்து விலகி இருந்தார்கள். ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் அவர்களுக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளன. ஆகவே அடிப்படை கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தாமல் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது என்றார்.

## நீதிமன்ற கட்டளையை மீறித்...

கட்டளையை மீறி கட்டுமானப் பணிகள் இடம்பெறுவதை உறுதிப்படுத்திய பின்னர் இது தொடர்பில் தனது கடுமையான கண்டனங்களை அவர் தெரிவித்திருந்தார்.நீதிமன்றக் கட்டளையை மீறிக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் அவ்வாறு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமைக்கு எதிராக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடந்த (23.02.2022) ஆம் திகதி நான் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்திருந்தேன்.

அதனைத் தொடர்ந்து (02.03.2023)ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றில் AR/673/18 என்னும் வழக்கிலக்கத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீதமன்றக் கட்டளை மீறப்பட்டு கட்டுமானப்பணிகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு முறையீடும் செய்யப்பட்டது.

அத்தோடு தொல்லியல் திணைக்களத்தினர் தமது செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக எம்மீது வழக்குத் தொடர்கின்றனர்.

இந் நிலையில் தமது காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்களமக்களுக்கு வழங்கப்பட்டுவிடுமோ என எமது தமிழ் மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான சூழலில் சில பெரும்பாண்மையின இனவாத அரசியல்வாதிகள் தமது வாக்கு வங்கியை நிரப்பும் நோக்குடனேயே இங்கு வருகைதருகின்றனர். ஆனால் இவ்வாறான பெரும்பாண்மையின இனவாத அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது எமது நோக்கமல்ல.

எமது தமிழ்மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

தமிழர்களின் பூர்வீக பகுதிகளான தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் ஆகிய கிராமங்கள் மீள்குடியேற்றப்படவேண்டும்.

எமது தமிழ்மக்களுடைய காணிகள் பறிக்கப்படாமல் எமது மக்களிடமே அவை மீள கையளிக்கப்படவேண்டும் என தெரிவித்துள்ளார்.

## உள்ளக விசாரணையில் ஒரு...

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

தீவிரமடைந்துள்ள ஊழல் மோசடியால் இலங்கை புகழோடு வீழ்ச்சி நிலைக்கு செல்கிறது. நீதிதுறையின் பாதுகாப்பு மற்றும் சுயாதீனத்தன்மை தொடர்பில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது.

இயற்றப்படும் சட்டங்களினால் சமூக கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை அவதானிக்க வேண்டும். ஆகவே இயற்றப்படும் சட்டங்கள் வெறும் காட்சிப் பொருளாகவே காணப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் தற்போது இடம்பெறுகிறது. பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை மீது நம்பிக்கை கொள்ள முடியாத தன்மை காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வாய்மூல அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை மந்தகரமாகவே செயற்படுகிறது. சுதந்திரமான விசாரணை முன்னெடுக்கப்படுவது சந்தேகத்துக்குரியதே என உலக நாடுகளும் இன்று ஏற்றுக்கொண்டுள்ளன. உள்ளக விசாரணையில் ஒருபோதும் நீதி கிடைக்காது என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

மருதங்கேணி பகுதியில் எனக்கும், பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாடு அதனை தொடர்ந்து நான் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை பாரிய சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நிறைவுபெறுவதற்கு முன்னர் அவர் பொலிஸாரை பாதுகாக்கும் வகையில் செயற்படுகிறார் என்பது தெளிவாக விளங்குகிறது. ஆகவே இவ்வாறான தன்மை முழுமையாக மாற்றமடையும் வரை ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது என்றார்.

## சிங்களவர்கள் இந்தியாவி...

இப்பொழுது நாம் இலங்கையர்கள். அதனால் நாம் கைகோர்த்து செயற்பட்டு காணியுரிமையை பெற்றுக் கொண்டு நாட்டை கட்டியெழுப்புவோம்.

நாம் முழுமையான பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்ள காணியுரிமை தேவை என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை காணி தினத்தை முன்னிட்டு ஹட்டனில் பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!

SCAN ME

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
021 222 7557 / +94 76 567 3339

# சம்மாந்துறை : கல்முனை பிரதான வீதியில் விபத்து...!





சம்மாந்துறை - கல்முனை பிரதான வீதியில் நேற்று (21) காலை விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கதிர்காமத்தில் இருந்து சம்மாந்துறை ஊருடாக மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றே இவ்வாறு வீதியை விட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சாரதி உட்பட 10 பேர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அதிதிகளின்றி இடம்பெற்ற யோகா விழிப்புணர்வு நிகழ்வு!









இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் அம்பாறை மாவட்ட செயலகத்துடன் இணைந்து நடத்தும் சர்வதேச யோகா விழிப்புணர்வு நிகழ்வு நேற்று(21) புதன்கிழமை காலை காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெற்றது.

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நடைபெறும் இந்நிகழ்விற்கு புத்த சாசன மத விவகார கலாச்சார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக பிரதம அதிதியாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கௌரவ அதிதியாகவும் கலந்துகொள்ள இருந்தனராயினும் இறுதி வரை அவர்கள் வருகைதரவில்லை.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.என். டக்ளஸ் பிரதானியாக கலந்து சிறப்பித்தார்.

# காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் முத்துச் சப்பர ஊர்வலம்!













காரைதீவு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு உற்சவத்தின் ஓரங்கமாக (20) செவ்வாய்க்கிழமை இரவு முத்துச் சப்பர ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 14ஆம் தேதி புதன்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகிய தீமிதிப்பு உற்சவம் தற்போது 10 நாட்கள் சடங்குகள் இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் 23ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை தீமிதிப்பு வைபவம் பிரதம பூசகர் குமாரகுலசிங்கம் லோகேஷ் தலைமையிலே நடைபெறும்.

பூஜைகள் தினமும் பகல் 12 30 மணிக்கும் இரவு 7 மணிக்கும் இடம் பெறும் என்று ஆலய பரிபாலன சபையின் செயலாளர் மா.கணேசலிங்கம் தெரிவித்தார்.

23ஆம் தேதி காலையில் மஞ்சள் குளித்து தீமிதிப்பு இடம்பெறும். பகல் அன்னதானம் இடம் பெறும் என செயலாளர் கணேசலிங்கம் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச யோகா தின விழிப்புணர்வு நடைபவனி!








சர்வதேச யோகா தினத்தையொட்டி திருமலை வளாக கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவபீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட யோகா தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி (21) இடம்பெறவுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக திருமலை வளாக துணைத் தலைவர் (திருமதி) சந்திரவதனி ஜி.தேவதாசன் தலைமையில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு முன்னால் நேற்று (21) காலை 7.45 மணிக்கு ஆரம்பமான இந்த நடைபவனி தபாலக சந்தி வீதி வழியாகச் சென்று திருகோணமலை நகரசபைக்கு முன்னால் முடிவுற்றது.

இந்த விழிப்புணர்வு நடைபவனியில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள் மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர், கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவபீட விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், சுதேச மருத்துவ திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சித்த மருத்துவபீட மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## ஜப்பானின் மிகப்பெரிய சுற்றுலா நடத்துநர்களுடன் கிழக்கு மாகாண

# ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடல்!







டோக்கியோவில் உள்ள இலங்கை தூதரகத்தில் ஜப்பானின் மிகப்பெரிய சுற்றுலா நடத்துநர்களுடன் விரிவான கலந்துரையாடல்களை இ.தொ கா. தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் மேற்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் ஜப்பானியர்கள் இலங்கையில் பார்வையிடாத இடங்களை ஊக்குவிக்க கிழக்கு மாகாணம் மற்றும் மலையகம் ஆகிய இரண்டு பிராந்தியங்களிலும் தனிப்பட்ட அனுபவத்தைப் பெறுவதற்காக வருமாறு செந்தில் தொண்டமானால் அழைப்பு விடுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஜப்பான் நாட்டில் உள்ள ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தலைவர், ஜப்பானுக்கான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் GSA பணிப்பாளர் மற்றும் தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதன் போது கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் பார்வையிடுவதற்காக சில சுற்றுலா தளங்களை செந்தில் தொண்டமான் பரிந்துரை செய்தார்.

கிழக்கு மாகாணம் - டால்பின்கள் மற்றும் திமிங்கலங்களைப் பார்வையிடுவது, சர்ஃபிங், ஸ்கூபா டைவிங், பவளப்பாறை படகு சவாரி,வனவிலங்கு சரணாலயம், பறவைகள் சரணாலயம், மான் நகரம், தொல்லியல் மற்றும் கலாச்சார தளங்கள், இயற்கை சுற்றுலா தளங்கள்

மலையகம் - மலை காட்சிகள், மலையேற்றம் மற்றும் முகாமிடுதல், தேயிலை தொழிற்சாலைகள், உலக முடிவு இயற்கை சுற்றுலா தளம், ஒன்பது வளைவு பாலம், லிப்டன் சீட், நக்கிள்ஸ் மலைத்தொடர் செந்தில் தொண்டமானின் பரிந்துரைக்கு அமைவாக, ஜப்பானின் சுற்றுலா நடத்துநர்கள் எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு வருகை தருவதாக ஒப்புதல் அளித்ததுடன்,இலங்கை சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக தமது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்குவதாக தெரிவித்தனர்.

# வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா!!



வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நேற்றைய தினம் (21.06) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வட மாகாண ஆளுனர் பீ.எஸ்.எம். சாள்ஸ் கலந்து கொண்டு புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலையின் பிரதான நூழைவாயிலினை திறந்து வைத்ததுடன், கௌரவ விருந்தினர்களான வவுனியா வடக்கு வலயக்கல்வி பணிப்பாளர் லெனின் அறிவழகன், மற்றும் பாடசாலையின் பழைய மாணவர் த.இராசரத்தினம் ஆகியோரால் திருவள்ளுவர், பண்டாரவன்னியன் மற்றும் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி மறைந்த கலாநிதி அப்துல்கலாம் ஆகியோரின் சிலைகளும் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இதன்போது சாதாரண தரம், உயர்தரம் மற்றும் விளையாட்டுக்களில் சிறந்த பெறுபேறுகளை பெற்றவர்களிற்கான கௌரவிப்புகளும் இடம்பெற்றிருந்தது.

பாடசாலை அதிபர் கோ.குலேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# வவுனியா, குருமன்காடு பகுதியில்
# 21 வயது இளைஞன் கைது!!

வவுனியா, சூசைப்பிள்ளையார்குளம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் நேற்று (21.06) தெரிவித்தனர்.
வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள இரண்டு வீடுகளில் 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மற்றும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளை திருடியமை மற்றும் வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகளை திருடியமை, அத்துடன், வவுனியா, மில் வீதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் கோயில் உண்டியல் உடைத்து பணம் திருடியமை மற்றும் ஒலிபெருக்கி திருடப் பட்டதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.
குறித்த நகையினை வீட்டில் வைத்து விட்டு வீட்டார் வவுனியா நகருக்கு வேலை நிமித்தமாக சென்றுவிட்டு வீடு திரும்பிய போது, வீட்டின் பின்கதவு திறக்கப்பட்டு இருந்ததுடன், வீட்டு அலுமாரிகளும் திறக்கப்பட்டிருந்தன.
வீட்டு அலுமாரிகளை பார்வையிட்ட போது அதில் இருந்த நகைகளை காணவில்லை. இதனையடுத்து வீட்டு உரிமையாளரால் வவுனியா பொலிசாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிசார் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.
வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜயக்கொடியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி பி.கஜேந்திரன் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட் திசநாயக்கா (37348), பொலிஸ் கொன்டபிள் தயாளன் (91792) உள்ளடங்கிய பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.
இச் சம்பவம் தொடர்பில் பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா, சூசைப்பிள்ளையார்குளம் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து 10 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கு அடைவு வைக்கப்பட்ட நிலையில் நகையும் மீட்கப்பட்டதுடன், ஆலய ஒலிபெருக்கியும் மீட்கப்பட்டது.
மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தனர்.




# வவுனியாவில் தீப்பற்றியேறிந்த வீட்டினுள் இருந்து சடலம் மீட்பு : பொலிஸார் விசாரணை



வவுனியா தேக்கவத்தை பகுதியில் நேற்று (21.06.2023) அதிகாலை தீப்பற்றியேறிந்த வீட்டினுள் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,
குறித்த வீடு தீப்பற்றியேறிவதாக அயவலர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் மாநகர சபை தீயனைப்பிரிவினர் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமையினையடுத்து வீட்டிக்குள் நுழைந்தனர் இதன் போது வீட்டின் குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.
இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமையுடன் தடவியல் பொலிஸாரின் உதவியையும் நாடியுள்ளனர்.

# வடக்கு கிழக்கில் தொல்லியல் இடங்களை பாதுகாக்க கோரி மகாநாயக்க தேரர்களிடம் சரணடைந்த தேரர்..!





வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பதற்கு அவசர வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்குமாறு எல்லாவல மேதானந்த தேரர் மகாநாயக்க தேரர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
இந்த விடயம் குறித்து மகாநாயக்க தேரர்களுக்கு எல்லாவல மேதானந்த தேரர் கடிதம் ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளார்.




அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



**We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.**

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | |
|---|---|
| சுன்னாகம் | 021 224 2022 |
| நெல்லியடி | 021 226 0700 |
| பருத்தித்துறை | 021 226 1100 |
| ஆவரங்கால் | 021 222 6688 |
| சித்தங்கேணி | 021 225 2500 |
| சாவகச்சேரி | 021 227 0700 |
| பூநகரி | 021 320 1818 |
| முழங்காவில் | 021 300 6544 |
| விஸ்வமடு | 021 320 1515 |
| மன்னார் | 023 225 1656 |
| கிளிநொச்சி | 021 228 5505 |
| வவுனியா | 024 222 7777 |







இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.